Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 247

செவ்வாய்க்கிழமை
30 ஜூலை 2024

ஆடி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

### முச்சந்தி முரளி



"இனித்தான் எல்லாப் பக்கமும் லெக்சன் கச்சேரி களைகட்டப்போகுது கண்டியளோ"



# ரணிலுக்கு ஆதரவில்லை

## பெரமுன அதிரடி அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 30

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில், ரணிலை ஆதரிப்பதில்லை என்று பொதுஜன பெரமுன நேற்றுத் தீர்மானித்துள்ளது. தனியான வேட்பாளரை களமிறக்கப் போவதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

11

## பெரமுன பிளவடையும்

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதில்லை என்று பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ள நிலையில், இந்த முடிவால் பெரமுனவுக்குள் பிளவுகள் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனாதிபதி ரணிலைத் தவிர வேறு எவரேனும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டால், நிச்சயம் அதை ஏற்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி ரணிலையே ஆதரிக்

11

## ரணிலையே ஆதரிப்போம்

### பெரமுனவின் முக்கியஸ்தர் பிரமித்த பண்டார அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கப்போவதாக, இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றையதினம் தீவிரமான ஆலோசனையில் ஈடுபட்ட பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளது. இதையடுத்தே, தான் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கப்போவ

11



## நீதி அமைச்சர் பதவி விலகல்

கொழும்பு, ஜூலை 30

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தனது அமைச்சு பதவியை இராஜினாமா செய்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து, அவர் தனது பதவி விலகல் முடிவை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ச பெயரிடப்பட்டுள்ள நிலையில், நீதி அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### யார் வென்றாலும்

## இனப்பிரச்சினையை தீர்ப்பதே அவசியம்!

### ஜப்பானியத் தூதுவர் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை – ஜப்பானிய நட்புறவுச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச நாணய நிதி

11

## குழந்தை பிரசவித்த இளம்தாய் உயிரிழப்பு

### மன்னாரில் சோகம்

மன்னார், ஜூலை 30

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி தம்பனைக்குளத்தைச் சேர்ந்த இளம்தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் பரிதாபமாக

11

## 'அரகலய' போராட்டக்காரர்களும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பு!

கொழும்பு, ஜூலை 30

அரகலயவில் ஈடுபட்ட தரப்பினரால் உருவாக்கப்பட்டுள்ள மக்கள் போராட்ட முன்னணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக சட்டத்தரணி நுவான் போபகே களமிறங்கவுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பை மக்கள் போராட்ட முன்னணியினர் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

11

## நல்லூர்த் திருவிழா: பந்தல்கால் இன்று!

யாழ்., ஜூலை 30

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயக் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவுக்கான பந்தல்கால் நடும் நிகழ்வும் பாரம்பரியமாகக் கொடிச்சீலை வழங்குபவர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறவுள்ளன. (அ-ம-66)

## இந்து வழிபாட்டுத்தலங்கள் பௌத்தத்துக்காக ஆக்கிரமிப்பு!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை மீது கடும் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களை அபகரித்து, அவற்றை பௌத்த தலங்களாகவும் பௌத்தர்களுக்கு உரிய பகுதிகளாகவும் மாற்றுவதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொல்பொருள் திணைக்களம் உட்பட அரச நிறுவனத்தினர், இராணுவம், பொலிஸார் இணைந்து மத சிறுபான்மை இனத்தவர்களின் கலாசாரம், வழிபாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும்ஒருங்கிணைந்தமூலோபாயத்தை

11

## போலி உறுதி மோசடி; மூன்று பேர் கைது!

### அவர்களில் ஒருவர் நில அளவையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

போலி உறுதி மோசடியில் ஈடுபட்டமைக்காக, யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் நில அளவையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் வசிக்கும் தம்பதியர் மருதங்கேணியில் உள்ள தமது காணிக்கு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கண்காணிப்பு
# சர்வதேச குழுக்கள் வருகை

**கொழும்பு, ஜூலை 30**
**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திட்டமிடல் தொடர்பில் ஆரம்ப ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பொதுநலவாய அமைப்பின் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்று இலங்கை வந்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.**

தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டு மையத்துக்கு அறிக்கை அனுப்பவுள்ளனர்.

அதேவேளை மேலும் 3 சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் இலங்கைக்கு வரவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக உள்ள 3 அரசியல் கட்சிகள் பவ்ரல் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு அதில் கூறப்பட்டுள்ளபடி செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ச-இ)




### வடமராட்சியில்
## சேறு பூசப்பட்ட அநுர போஸ்டர்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்காவுக்கு வடமராட்சிப் பிரதேசத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரச தலைவருக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் போட்டியிடும் வேட்பாளர்கள் பரப்புரைகளை முன்னெடுத்துள்ளனர். 'எங்கள் தோழர்' எனக் குறிப்பிடப்பட்டு அநுரகுமார திஸாநாயக்காவின் புகைப்படத்துடன் கூடிய சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் ஒட்டப்பட்ட பல சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டும், சேறு மற்றும் சாணி பூசப்பட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

### அடுத்த ஆண்டில்
## 90 சதவீத மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி

கொழும்பு, ஜூலை 30
அடுத்த ஆண்டிலிருந்து 90 சதவீதமான மருந்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது 200க்கும் மேற்பட்ட பல்வேறு வகையான மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகளில் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மருந்துகளில் சுமார் 25சதவீதமான உள்நாட்டு உற்பத்தியாளர்களால் விநியோகிக்கப்படுகிறது என்றும் அமைச்சர் பத்திரண சுட்டிக்காட்டினார். (ச-இ)

## 6 மாத காலத்தில் 290 துஷ்பிரயோகங்கள்

கொழும்பு, ஜூலை 30
நடப்பாண்டின் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 290 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ச)

## சு.க. நாளை தீர்மானம்

கொழும்பு, ஜூலை 30
ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணி நாளை புதன்கிழமை வெளிப்படுத்தும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடவில்லை. தற்போது ஒரேயொரு சட்டபூர்வமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கையில் இருப்பதாக சிலர் கூறுகின்ற கருத்துகள் செல்லுபடியாகாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## எதிர்க்கட்சி அருகதையற்றது
### செஹான் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30
2022ஆம் ஆண்டு முதன்மை பணவீக்கம் 70 சதவீதமாகக் காணப்பட்டபோது சவால்களை ஏற்காமல் தப்பிச் சென்றவர்கள் தற்போது பணவீக்கம் 2 சதவீதமாக குறைவடைந்துள்ள நிலையில் அரசாங்கம் என்ன செய்தது என்று கேள்வி எழுப்புகிறார்கள். ஜனாதிபதி என்ன செய்தார் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

-இவ்வாறு நாடாளுமன்ற அமர்வில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். சர்வதேச பொருளாதார கொள்கைகளுக்கு அமையவே பொருளாதார நிலைமாற்றம் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டவரைவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு முதன்மை பணவீக்கம் 70 சதவீதமாகக் காணப்பட்டபோது சவால்களை ஏற்காமல் தப்பிச் சென்றவர்கள் தற்போது பணவீக்கம் 2 சதவீதமாக குறைவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி, அரசாங்கம் என்ன செய்தது என்று கேள்வியெழுப்புகிறார்கள். என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வகைதொகையற்ற கைதுகள் துரித நடவடிக்கை எடுங்கள்!
### தமிழக முதல்வர் ஜெய்சங்கருக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 30
இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை 22 ஆம் நாள் வரை மாத்திரம் 250 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில், ஆண்டொன்றில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச கைது எண்ணிக்கை இதுவாகும். சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

-இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பி வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது: மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்று வருகிறது. இதனால் எம் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இதனைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாகமேற்கொள்ளவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

## சர்வாதிகாரப் பாதையில் செல்கிறது அரசாங்கம்
### சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 30
பொலிஸ்மா அதிபர் விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை நிராகரிக்கும் வகையில் அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு நிலைப்பாடும் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நாட்டை சர்வாதிகாரப்போக்கில் கொண்டுசெல்லும்.

-இவ்வாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் எச்சரித்துள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு முரணான வகையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் சட்டரீதியான ஏற்புடைமை இல்லை.

சட்டத்தால் அனுமதியளிக்கப்பட்ட எல்லை வரை மாத்திரமே நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்த முடியும். அதன்படி சட்டமானது அரசியலமைப்புப்பேரவை சார்ந்த விவகாரங்கள் நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் கொண்டுவரப்படுவதற்கு இடமளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பூங்காக்கள் வருவாய் மில்லியன் குவிந்தது!

கொழும்பு, ஜூலை 30
தாவரவியல் பூங்காக்கள் மூலம் இந்த வருடத்தின் ஜூன் மாதம் வரையில் 735.56 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எச்.ஜி. ஜயசேகர தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டு வருமானம் 420.02 மில்லியன் ரூபாவாகவும், 2023ஆம் ஆண்டு வருமானம் 901.1 மில்லியன் ரூபாவாகவும் வருவாய் ஈட்டப்பட்டது. சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் இந்த வருவாய் உயர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசார செலவு 5 நாள்களில் தீர்மானம்

## தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 30**

**எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் பிரசாரத்துக்காக செலவிடக்கூடிய ஆகக்கூடுதலான தொகையை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கவுள்ளது.**

மாகாண, உள்ளூராட்சித் தேர்தல்களுக்கும் இது பொருந்தும். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்து ஐந்து நாள்களில் இந்தத் தொகை தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். வேட்பாளர்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படும். பணவீக்கம் மற்றும் நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பவற்றை அடிப்படையாக வைத்தே வேட்பாளர்களின் பிரசார செலவுத் தொகை தீர்மானிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக செலவிடும் வேட்பாளர்கள் பற்றி பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகள், சுயாதீனக் குழுக்கள் போன்றன தீர்மானிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக செலவிடும் பட்சத்தில் தண்டப்பணம் அறவிடுவதற்கும் புதிய சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. அன்பளிப்புகள், வெளிநாட்டு அன்பளிப்புகள், வெளிநாட்டு பங்கு முதலீடுகள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதையும் புதிய சட்டம் கட்டுப்படுத்துகிறது. மேலும்தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்த தொகையை, வாக்காளர்களின் எண்ணிக்கைக்கேற்ப பகிர்ந்து செலவிட முடியுமெனவும் புதிய சட்டத்திருத்தம் கூறுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-6)

## சஜித்தின் கூட்டங்கள் இரத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ அம்பாறை மாவட்டத்தில் கலந்துகொள்ள இருந்த எட்டு கூட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பாடசாலைகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஸ்மார்ட் அறைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள், முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தல் விதிமுறைகளுக்கமைவாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மஹிந்தவின் ஆதரவுக்காக கடிதம் எழுதினாரா ரணில்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார் என சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி வருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடவுள்ளதால் தமக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும், பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுச் சபையில் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அந்தத் தகவலை உறுதிப்படுத்தவில்லை. (எ-இ)

## கசிப்பு,கோடாவுடன் பெண் ஒருவர் கைது

சிவபூதராயர் கோவிலடி, சுன்னாகம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவர் தொடர்ந்தும் மூன்றாவது தடவையாக கசிப்பு மற்றும் கோடாவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 80 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் 2 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-25-27)

## பொலிஸ்மா அதிபர் சிக்கல் ஒருவாரத்தில் தீர்க்கப்படும்!

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான சர்ச்சை, ஒரு வாரத்துக்குள் தீர்க்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பிரதம நீதியரசருடனும் சபாநாயகருடனும் கலந்துரையாடி பொலிஸ்மா அதிபர் நியமன சர்ச்சைக்குத் தீர்வு காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹோமாகம பஸ் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இடம்பெறும். பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு எதிராக கத்தோலிக்க பேராயர் மல்கம் ரஞ்சித் உட்பட இன்னும் சிலர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-6)

# தேர்தல் செலவுகள் 1.4 பில்லியன் ரூபா

## தபால் திணைக்களம் மதிப்பீடு

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலுக்கு 1.4 பில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது தபால் திணைக்களம். இந்தத் தகவலைப் பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார். பொது அஞ்சல் கட்டணம், பதிவுசெய்யப்பட்ட தபால் கட்டணம், எழுதுபொருள்களுக்கான செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், நிர்வாகக் கட்டணம் உள்ளிட்ட பல செலவுகள் தொடர்பில் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த மதிப்பீடு ஒரு முன்னறிவிப்பு என்றும் கோரப்பட்ட இறுதித் தொகை மாற்றமடையலாம் எனவும் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**வ**டக்கில இருக்கிற ஆஸ்பத்திரி ஒண்டில நாலைஞ்சு நாளைக்கு முதல் நடந்த சம்பவம் இது. ஏதோ வருத்தமெண்டு போனவரை வார்ட்டில வைச்சு, செக்பண்ணி, மருந்து குடுத்து அதைச் சுகமாக்கிப் போட்டினம். இனி அவர் வீட்டைபோக வேண்டியதுதான் மிச்சம். ஆனால் அதில ஒரு சிக்கல். அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்குத்தர் வந்து, பார்த்து, சைன் வைச்சால்தான் துண்டு வெட்டி வீட்ட போக விடுவினம். ஆனால் காலமை வரவேண்டிய டாக்குத்தர், மத்தியானமாகியும் வரேலை. வருத்தமெண்டு வந்தவரின்ர வீடு, ஆஸ்பத்திரியில இருந்து பதினைஞ்சு இருபது கட்டைக்கு அங்கால இருக்கு. அவரைக்கூட்டிக்கொண்டுபோக வந்தவரும், எள்ளோட சேர்ந்த எலிப்புழுக்கை மாதிரி வீணாக் காய்ஞ்சதால கடுப்பேறி, கடைசியில் பக்கத்தில உள்ள 'பாருக்கு' போய், நல்லா ஏத்திக்கொண்டு உள்ளுக்க வந்திருக்கிறார்.

அவர் வந்தநேரம், டாக்குத்தரும் வார்ட்டுக்கு வந்திட்டார். வந்த டாக்குத்தர் துண்டு வெட்டவேண்டியவரின்ர அலுவலைக் கடைசியாப் பாப்பமெண்டிட்டு, வார்ட்டில இருந்தவையைப் பாக்கத் தொடங்கியிருக்கிறார். இதைப் பார்த்ததும், வருத்தக்காரரை கூட்டிக்கொண்டு போகவந்தவர், கோபத்தில கத்தத் தொடங்கிட்டார்.

'எத்தினை மணிக்கு வரவேண்டிய டொக்டர் இப்பதான் ஆடி அசைஞ்சு வாறர். வந்தவர் துண்டு வெட்டிவிட்டால் நாங்கள் போயிருப்பமே. இப்பிடி சனத்தைக் காவல் காக்க வைக்கிறதில உவையளுக்கு ஒரு சந்தோசம்' எண்டு எக்ஸ்ட்ராவா நாலைஞ்சு தூசணங்களையும் சேர்த்துக் கத்தியிருக்கிறார். அதுக்கு அந்த டாக்குத்தர் ஒண்டுமே சொல்லேலை. மெல்ல நிமிர்ந்து லேசாச் சிரிச்சுப்போட்டு, தன்ர வேலையில மூழ்கிட்டார். ஆனால் அப்பிடி அந்த டாக்குத்தர் கனநேரம் சாந்தசொரூபியா நிக்கேலாத அளவுக்கு, வருத்தக்காரரை கூப்பிட வந்தவர் ஒரு வசனத்தைச் சொல்ல, டாக்குத்தர் அப்பிடியே ருத்திரதாண்டவம் ஆடத் தொடங்கிட்டார். 'பொறு வாறன் உனக்கு' எண்டு கறுவிக்கொண்டு, 'இஞ்ச வார்ட்டில ஒருத்தன் குடிச்சுப்போட்டு பெரும் பிரச்சினை. ஆளை வந்து அரஸ்ட் பண்ணுங்கோ' எண்டு பொலிஸூக்கு போன் பண்ணிட்டார். பொலிஸ்காரர் வாறதுக்குள்ள, வருத்தக்காரரைக் கூட்டிக்கொண்டுபோக வந்தவர் 'எஸ்கேப்' ஆகிட்டார். ஆஸ்பத்திரி முழுக்க பொலிஸ் தேடியும் ஆள் கிடைக்கேலை. ஆனால் அந்தாளைப் பிடிக்காமல் பொலிஸ்காரர் வரக்கூடாது எண்டு டாக்குத்தர் கடுமையாச் சொல்லிப்போட்டாராம்.

தூசணத்தால பேசேக்ககூட பேசாமல் நிண்ட டாக்குத்தரை இப்பிடி நிலைகுலைய வைச்ச வசனம் என்ன எண்டு அறிய உங்களுக்கும் கடும் ஆர்வமா இருக்கும். வேற ஒண்டுமில்லை. 'உங்களுக்கெல்லாம் டொக்டர் அர்ச்சுனாவைக் கொண்டந்து விட்டால் தான் திருந்துவியள்' எண்டதுதான் அந்த வசனம். அப்பிடி அர்ச்சுனா எண்டாலே டாக்குத்தர் மாருக்கெல்லாம் பிரஷர் ஏறுது. இப்ப அர்ச்சுனா குறளிவித்தை காட்டி, தன்ர மதிப்பை தானே கெடுக்கத் தொடங்கிட்டாலும், இன்னும் சனத்துக்கு டாக்குத்தர்மாரில உள்ள வெறுப்பு போகேலை. ஆனால் உண்மையில டாக்குத்தர்மாரிலையும் அவ்வளவு பிழை இல்லை. சிலர் வேணுமெண்டே இப்பிடி டாக்குத்தர்மாரை 'உம்மாண்டியள்' மாதிரி சனத்திட்ட சொல்லி, திசைதிருப்பி ஆதாயத்தை அனுபவிக்கினம். அப்பிடி டாக்குத்தர் மாரை ஏன் கூடாதமாதிரிச் சித்தரிக்கினம் எண்டதை பிறகொருக்கா பட்சி சொல்லும்.


-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபான்ஸ் வழங்கும் மின்சாரத்தை சேமிக்கும் சூழல் நட்புறவுமிக்க

# ஸிறூ ஸ்மார்ட் இன்வெர்டர் குளிர்சாதனப் பெட்டி



இலங்கையில் LG குளிர்சாதனப் பெட்டிகளுக்கான ஒரே யொரு அங்கீகாரம் பெற்ற முகவரான Abans இலங்கையில் வழங்கும் அதிக ஆற்றல் திறன் மிக்கLG Smart Inverter குளிர்சாதனப் பெட்டியை உள்நாட்டு சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இலங்கை சூரிய சக்தி அதிகாரசபையினால் LG குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மின்சார செயற்றிறனுக்காக வழங்கப்படும் 7.3 (L/R) தரப்படுத்தல் இந்த LG குளிர்சாதனப் பெட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த செயற்பாட்டுடன் நிலையான எதிர்காலத்திற்கு ஏற்ற உற்பத்தியாக LG Smart Inverter குளிர்சாதனப் பெட்டியை அறிமுகம் செய்ய முடியும்.

253 லீற்றர் மாதிரியின் LG ஸ்மார்ட் இன்வெர்டர் குளிர்சாதனப்பெட்டி மின்சார சேமிப்பில் முன்நிலையில் இருக்கும் ஒரு உற்பத்தியாகும். மேலும் இதன் மாதாந்த மின்நுகர்வு 24kWH மாத்திரமாகும். மின்சாரத்தை சேமிக்கும் சூழல் நட்புறவுமிக்க தற்போது சந்தைகளில் உள்ள உயர்தரமான மேம்படுத்தப்பட்ட LG ஸ்மார்ட் இன்வெர்டர் கொம்பிரெஸரை கொண்டுள்ளது. குளிர்சாதனப் பெட்டிக்குள் களஞ்சியம் செய்துள்ள உணவுகளின் அடிப்படையில் தேவையான குளிர்ச்சியை வழங்குவதற்காக கொம்பிரெஸர் இயங்கும் வேகம் சரிசெய்யப்படுவதோடு, 36% வரை மின்சாரத்தை சேமிக்கிறது.

LG Door Cooling+™ தொழில்நுட்பம் வழக்கமான குளிர்சாதன பெட்டிகளை விட 35% குளிர்ச்சியை வேகமாக வெளியிடுகிறது. இதன்போது குளிர்சாதனப் பெட்டியின் உட்புறத்திலிருந்தும், கதவுப் புறத்திலிருந்தும் குளிர்ச்சி வெளியேற்றப்படுவதால் அது குளிர்ச்சியை சரியான முறையில் பராமரித்து, மின்சாரத்தை சேமிக்கிறது, மற்றும்உணவைபுத்துணர்ச்சியாக வைத்திருக்கிறது.

LG ஸ்மார்ட் இன்வெர்ட்டர் குளிர்சாதனப்பெட்டிகளுக்குப் பயன்படுத்தப்படுவது சுற்றுச்சூழலுக்கு உகந்த R600a குளிர்பதன வாயுவாகும். Global Warming Poten tial (GWP) 3 தரநிலையுடன் புவி வெப்பமடைதலுக்கு எதிராக குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் குளிர்பதன வாயூவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. R600a குளிர்பதன வாயு மின்சாரத்தை சேமிப்பதோடு, ஓசோன் படலத்தை பாதுகாக்க உதவுகிறது.

LG அறிமுகம் செய்யும் மற்றுமொரு புதிய தயாரிப்பாக LG சைட் பை சைட் குளிர்சாதனப் பெட்டியை அறிமுகம் செய்யலாம். இங்குள்ள சிறப்பான InstaView Door in Door™ தொழில்நுட்பம் மூலம் கிளாஸ் இற்கு 2 முறை நொக் செய்வதன் மூலம் குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே விளக்கு ஒளிரும், இதன்மூலம் குளிர்சாதனப் பெட்டியின் கதவைத் திறக்காமல் குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே இருப்பதை பார்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. இதன்மூலம் அடிக்கடி கதவைத் திறக்க தேவைப்படாது, மின்சாரம் சேமிக்கப்படுகிறது.

குளிர்சாதனப்பெட்டிக்குள் சுத்தமான மற்றும் புதிய காற்றைப் பரப்ப உதவும் Hygiene FRESH+™ அமைப்பை இங்கே காணலாம் மற்றும் அதன் 5 சுத்தம் செய்யும் படிமுறைகள் சுத்திகரிப்பு செயற்பாட்டின் மூலம் குளிர்சாதனப்பெட்டியில் உள்ள 99.999% பக்டீரியா மற்றும் நாற்றங்களை நீக்குகிறது.

LG ThinQ ஆப்ஸ், குளிர்சாதனப்பெட்டியை எந்த நேரத்திலும், எங்கிருந்தும் இயக்கவும் மற்றும் Fast Ice Making my;yJ Door Open Alerts போன்ற அம்சங்களை உங்களால் அனுபவிக்கவும் முடியும்.

மேலதிக விபரங்களுக்கு நாடளாவிய அபான்ஸ் காட்சியறைகளில் அல்லது BuyA bans.com இற்கு பிரவேசியுங்கள்.

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் வழங்கவுள்ளார். 'ஆடி அமாவாசைச் சிறப்புகள்' எனும் விடயப்பொருளில் சைவப்புலவர், பிரசங்க சக்கரவர்த்தி கு. சுமுகலிங்கம் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-25)

★★★★★★★★★

யாழ்ப்பாணம், ஜூலை 30
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 16 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.
'மாணிக்கவாசகரும் திருப்பொன்னூஞ்சலும்' எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதன் சொற்பொழிவாற்றுவார்.
சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-25)

# ஆடி அமாவாசைப் பெருவிழா

யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவமும், தர்ப்பணாதி அனுட்டானங்களும் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. காலை 5.45 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும். அடியார்கள் தீர்த்த சங்கற்பம் மற்றும் பிதிர் தர்ப்பணங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (எ-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**இடபம்:** காலையில் சற்றுச் சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள்.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அதன் காரணமாக கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பார்த்த காரியம் முடிவது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம் :** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பிற்பகலுக்கு மேல் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வியாபாரத்தில் பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெந்து தணிதல் தகுமா...?

முல்லைத்தீவில் இந்தமாதம் வீடொன்று தீக்கிரையாகியிருக்கின்றது. அதுபோல், முள்ளியவளைப் பகுதியில் உள்ள தேக்கங்காட்டில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆறு ஏக்கர் பரப்பளவில் காட்டுத்தீயும் ஏற்பட்டிருந்தது. தீப்பரவலையடுத்து, இளைஞர்களும் பொலிஸாரும் இணைந்துதான் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தார்களே தவிர, மற்றும்படி முறைசார் நடவடிக்கைகள் எவையும் அங்கு மேற்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணம் முல்லைத்தீவுக்கு என தனியானதொரு தீயணைப்புப் பிரிவு இன்றுவரை இல்லவேயில்லை.

2048ஆம் ஆண்டில் இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவது என்பதே ஜனாதிபதி ரணிலின் இலக்கு. அதை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் அவர் வெளிப்படுத்தியுள்ளார் அல்லாமலும் பௌத்தத்தை சர்வதேச மயப்படுத்துவதிலும், காலநிலை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் இலங்கை இரண்டாம் தரத் தலைமையையேனும் வழங்கும் வகையில் அண்மைக்காலமாகப் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றமை தெரிந்ததே. ஆக, ஒரு முனையில் 'அபிவிருத்தியும் அதற்குரிய அங்கீகாரத்தையும்' இலங்கை தேடிக்கொண்டிருக்கும் நிலையில்தான், மறுமுனையில் போரால் நேரடிப் பாதிப்புகளை எதிர்கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் உட்கட்டமைப்பின் சீத்துவம் பல்லிளிக்கின்றது. 'போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கீடுகளை வழங்குகின்றோம். அவற்றை நல்லபடியாகவே மேம்படுத்துகின்றோம்' என்று கொழும்பின் அதிகாரக் கதிரையில் ஏறும் தரப்புகள் மாறிமாறி தம்பட்டமடிக்கும் நிலையில், பேரிடரை எதிர்கொள்ளக்கூடிய உட்கட்டமைப்பு அலகொன்று ஒரு மாவட்டத்தில் இல்லாதிருப்பது எத்தனை அபத்தம்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் நிரந்தரமாக மௌனித்த பின்னரும் முல்லைத்தீவில் அதிகரித்திருக்கும் இராணுவப் பிரசன்னம் சொல்லிமாளாதது. எங்குபார்த்தாலும் படைமுகாம்கள்தான் 'ஒலிம்பிக் கிராமங்களைப் போன்று' மேம்பட்ட உட்கட்டமைப்பு நிலையுடன் பரவலாகிக்கொண்டே செல்கின்றன. ஆனால், பொதுமக்களின் வாழ்க்கை நிலையோ அந்தப் பிழைப்பாகவே அல்லலுக்குள் சிக்கியிருக்கின்றது. கொழும்பு நினைத்திருந்தால், இராணுவப் படையணியினரை மையப்படுத்திய தீயணைப்புத் துறையொன்றை முல்லைத்தீவில் ஏற்படுத்துவது மிகமிக இலகு. ஆனால், எத்தனையோ தடவைகள் சுட்டிக்காட்டிய பின்னரும் அந்தப் பிரிவு இன்னமும் முல்லைத்தீவில் வெற்றிடமாகவே இருக்கின்றதென்றால், இதுவொரு சபிக்கப்பட்ட போக்கன்றி வேறென்ன? அபிவிருத்தித் திட்டங்கள் அவசியம்தான். முதலீட்டு வலயங்கள் தேவைதான். ஆனால், எல்லாவற்றுக்கும் முன்னர், மக்களின் குரலறிந்து, அவர்களின் எண்ணங்களைச் செவிமடுத்து மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளும், நடவடிக்கைகளும்தான் காலம் கருதிய கருமங்களாக அமையும். அவ்வாறில்லாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒருபோதும் ஆக்கபூர்வமானவையாகவோ மக்களால் விரும்பப்படுவனவாகவோ இருக்கப்போவதில்லை. கணிசமான அளவு வனப்பகுதியைக் கொண்டிருக்கும் முல்லைத்தீவு, தற்போதுள்ள காலநிலை காரணமாக இயல்பாகவே காட்டுத்தீ போன்ற பேரிடர்களை எதிர்கொள்ளும் சாத்தியம் இருக்கவே செய்கின்றது. இவ்வாறிருக்கையில் வெள்ளம் வந்தபின்னர் அணை கட்டுவதற்குப் பதிலாக, வெள்ளம் பேராமல் இருக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலே தகும். அதுவே புத்திசாலித்தனமும்.




# அரசாங்கத்தின் போக்கால் அரசமைப்பு நெருக்கடியில்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 30**

**தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கவலை தரும் வகையில் உள்ளன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.**

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகச் செயற்படுவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் முரணான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அரசமைப்பு நெருக்கடியை நோக்கிச் செல்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நெருக்கடிகளை அதிகரிக்கும் அனைத்துச் செயற்பாடுகளில் இருந்தும் ஜனாதிபதி விலகிக்கொள்ள வேண்டும் என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது. (எ-இ)



## ஓகஸ்ட் மாதத்தில் இருந்து வாகனங்கள் இறக்குமதி

வாகன இறக்குமதிக்கான அனுமதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். தனிநபர் பயன்பாட்டுக்கான வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக வாகன இறக்குமதிக்கான அனுமதி ஓகஸ்ட் மாதம் முதல் வழங்கப்படும் எனத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, அதற்கான நடைமுறை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பொலிஸ் நிலையங்களில் தேர்தல் செயற்பாட்டு அறை

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தயாராகும் வகையில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் விசேட தேர்தல் செயற்பாட்டு அறைகள் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் செயற்பாட்டு அறைகள் நிறுவப்பட்டவுடன், தேர்தல் வன்முறைச் சம்பவங்கள், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படும் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

## சுற்றுலாவிகள் அதிகரிப்பு

கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில், வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு இந்த ஆண்டு வந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று வனஜீவராசிகள், வன வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் 3 இலட்சத்து 64 ஆயிரத்து 521 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்றும், அவர்களில் 40 வீதமானவர்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ-இ)



## வனப்பரப்பை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் தற்போது 29 சதவீதமாகவுள்ள வனவளப் பரப்பை 2030ஆம் ஆண்டுக்குள் 32 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வளவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியில் அறிவிக்கப்படாத ஒரு இலட்சத்து 44 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப் பரப்பை காடுகளாக உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

31.07.2024

**புதன்கிழமை - ஆடி - 15**

சுபநேரம் : 04.33 - 06.03

ராகுகாலம் : 12.03 - 01.33

**நாளொரு நல்வார்த்தை**

**சிந்தனையும் செயலும் ஒன்றாகி விட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்று விடலாம்.**

*- ராமதாசர்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அரசாங்கத்தாலும் எஞ்சியது ஏமாற்றமே!

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஆதங்கம்

**மன்னார், ஜூலை 30**

**இதுவரையில் எந்தவொரு ஜனாதிபதியாலும் எமது உறவுகள் குறித்த பதிலை வழங்கமுடியவில்லை. இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர். எமக்கான நீதியைப் பெற்றுத் தர அவர்களால் முடியாது.**



-இவ்வாறு மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள்மேலும்தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதுவரை ஜனாதிபதியால் தீர்வுதர முடிந்ததா? காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை மாவட்ட ரீதியாக ஸ்தாபித்துள்ளனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இழப்பீடு வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையைக் கண்டறிவோம் எனக் கூறப்பட்டுள்ளபோதும் இதுவரை உண்மையைக் கண்டறிய முன்வரவில்லை. உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே நாம் கேட்கிறோம்.தற்போது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியாலும் எமக்கு ஏமாற்றமே எஞ்சும்.

எனவே சர்வதேச விசாரணையைக் கோரிய எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றனர். (ச-56)

## அரச, தனியார் பணியாளருக்கு யாழ்.போதனாவில் விசேட வசதி


### பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு என சிறப்பு வசதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வெளிநோயாளர் பிரிவிலே நாள்தோறும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

வெளிநோயாளர் பிரிவானது வார நாள்களில் காலை 7 மணிதொடக்கம் மாலை 6.30 மணி வரையும் வார இறுதி நாள்கள் மற்றும் விடுமுறை நாள்களில் காலை 7 மணி தொடக்கம் 12 மணி வரையும் தனது சேவையை வழங்கி வருகின்றது. அந்தவகையில், அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சேவை பெறவேண்டுமாயின் மாலை 4 மணியில் இருந்து 6.30 மணி வரை சேவையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-555,66)



மன்னார் சிவில் சமூக பொருளாதார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு இளையோர் மீனவர் கூட்டின் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு சார்ந்த ஏழு மாவட்டங்களில் உள்ள இளம் மீனவர்கள் பங்குபற்றினர். (ச-20)



## நடைபயணம்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 97 ஆவது வருட நிறைவை முன்னிட்டு, பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், நடைபயணம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

நடை பயணத்தில் கல்லூரியின் முன்னாள் அதிபரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)

### வினாடி வினாப் போட்டி

## முக்கொம்பன் ம.வி. தேசியத்துக்குத் தெரிவு

கிளிநொச்சி , ஜூலை 30

கிளிநொச்சி வலய தமிழ் மொழித் தின கலைத்திறன் போட்டியில் முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவிகள் தமிழறிவு வினாடி வினாப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று மாகாண போட்டிக்குத் தெரிவாகி உள்ளனர். (ஒ-22,13)

## கோட்ட மட்டப் போட்டிகளில் சென். பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கோட்ட மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளில் தரம்-3, தரம்-4, தரம்-5 ஆகிய மூன்று பிரிவுகளிலும் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனை தமதாக்கியுள்ளனர்.

இந்தப் போட்டி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-20)



## புத்தகப்பைகள் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 30

தேசப் பற்றாளன் கதிர்காமு முருகப்பெருமான் ஞாபகார்த்தமாக இடைக்கட்டு, வள்ளிபுனம் பகுதியிலுள்ள பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-100)



அமரர் கிரிதரனின் ஞாபகார்த்தமாக முன்னெடுக்கப்பட்ட வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு அண்மையில் உடுப்பிட்டி விநாயகர் முன்பள்ளியில் இடம்பெற்றது. (ப-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளருக்கு ஆதரவு!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்களில் யாராவது சமஷ்டியை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தினால் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக தமிழரசுக்கட்சி பரிசீலனை செய்யும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- அடுத்த மாதம் 10, 11ஆம் திகதிகளில் மத்திய குழு கூடி பொதுவேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும் - என்றார். (ஒ-27)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.,சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பொறியியலாளர் நாகேந்திரன் நவரூபன் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி - கட்டம் - III
## வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.07.30 - 2024.08.13 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலப் பிரதி) 2024.08.14ம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக் கேள்விகள், அவை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.08.05 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/ 321/CF-19/2024 | வீதி புனரமைத்தல் செபஸ்ரியன் வீதி -அளவெட்டி தெற்கு | 3.245 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 33,000.00 | Till 12.11.2024 |
| 02 | NP/14/41(14)/05/02/ 322/CF-20/2024 | வீதி புனரமைத்தல் வறுத்தலைவிளான் விளையாட்டு மைதான இணைப்பு வீதி | 2.741 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 28,000.00 | Till 12.11.2024 |
| 03 | NP/14/41(14)/05/02/ 323/CF-21/2024 | வீதி புனரமைத்தல் செட்டிச்சோலை 4வது , 5வது இடதுபக்க ஒழுங்கை அளவெட்டி வடக்கு | 2.590 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 26,000.00 | Till 12.11.2024 |
| 04 | NP/14/41(14)/05/02/ 324/CF-22/2024 | வீதி புனரமைத்தல் மயிலிட்டி கலைமகள் பாடசாலை வீதி | 2.233 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 23,000.00 | Till 12.11.2024 |
| 05 | NP/14/41(14)/05/02/ 325/CF-23/2024 | வீதி புனரமைத்தல் கற்கோட்டபிள்ளையார் கோவில் வீதி கட்டம்-II கட்டுவன் | 2.076 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 21,000.00 | Till 12.11.2024 |
| 06 | NP/14/41(14)/05/02/ 326/CF-24/2024 | வீதி அமைத்தல் சாந்தா இணைப்பு வீதி - கட்டம் -II தையிட்டி | 1.870 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 01.10.2024 | 19,000.00 | Till 29.10.2024 |
| 07 | NP/14/41(14)/05/02/ 327/CF-25/2024 | வீதி புனரமைத்தல் வல்லை சங்கானை வீதி 21வது வலது பக்க ஒழுங்கை - அளவெட்டி மேற்கு | 1.075 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 01.10.2024 | 11,000.00 | Till 29.10.2024 |
| 08 | NP/14/41(14)/05/02/ 328/CF-26/2024 | எல்லைச்சுவர் அமைத்தல்- கூத்தன்சீமா சந்தை - பன்னாலை | 3.840 | 60 நாட்கள் | C8 & C7 கட்டட நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 39,000.00 | Till 12.11.2024 |
| 09 | NP/14/41(14)/05/02/ 329/CF-27/2024 | எல்லைச்சுவர் அமைத்தல்- பலாலிதெற்கு வசாவிளான் இந்து மயானம் | 1.650 | 60 நாட்கள் | C9 & C8 கட்டட நிர்மாணம் | 49 நாட்கள் | 01.10.2024 | 17,000.00 | Till 29.10.2024 |
| 10 | NP/14/41(14)/05/02/ 330/CF-28/2024 | வடிகால் அமைத்தல் - சந்தை வீதி - தந்தைசெல்வாபுரம், தெல்லிப்பளை | 3.457 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.10.2024 | 35,000.00 | Till 12.11.2024 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள் நீங்கலாக) 50மில்லியனினுள் இருப்பதால், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு
வலி வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை(கொல்லன்கலட்டி).
30.07.2024.

(CR43005) J-1


# இணுவில் பகுதியில் பொலிஸார் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 30

இணுவில் சந்தியில் சுன்னாகம் பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென பரந்துபட்ட வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஒ-66)

# கோப்பாயில் மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் திருமதி எம்.ஜெயக்குமாரின் மணிவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் விரிவுரையாளர் கழகத்தின் ஏற்பாட்டில் கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-66)

## மாகாண மட்டத்தில்

# பரந்தன் இந்து ம.வி. நான்கு சாதனைகள்

கிளிநொச்சி, ஜூலை 30

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால்வருடாந்தம்நடத்தப்படும்பாடசாலைகளுக்கிடையேயான பெருவிளையாட்டில், கைப்பந்து போட்டியில் மாகாணமட்டத்தில், கிளிநொச்சி, பரந்தன் இந்து மகா வித்தியாலயம் நான்கு சாதனைகளைப் படைத்துள்ளது.

பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை போட்டிகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி, பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் 20 வயது பிரிவு பெண்கள் அணி, 17 வயதுப்பிரிவு பெண்கள் அணி, 20 வயதுப்பிரிவு ஆண்கள் அணி ஆகியன முதலாமிடத்தையும் 17 வயதுப்பிரிவு ஆண்கள் அணி மூன்றாமிடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. அத்தோடு இப்போட்டியின் சிறந்த வீரனாக மாணவன் கு.விஜயசாந் மற்றும் சிறந்த வீராங்கனையாக இ.தனுசிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் மகோற்சவம் ஓகஸ்ட் 11 ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ஆவணி மகோற்சவம் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளன.

விசேட திருவிழாக்கள் வரிசையில் 15ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத்திருவிழா, 26ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழா 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழா என்பன இடம்பெறவுள்ளன.

(ம-125)

## தேர்த் திருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். கோட்டை முனீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருதல் இடம்பெறும். நாளை புதன் கிழமை தீர்த்தத்திருவிழாவும், நாளைமறுநாள் வியாழக்கிழமை வைரவர் சாந்தியும் நடைபெறவுள்ளன.

(ம- 22)

# கண்டி பெரஹராவுக்கு பாதுகாப்பு சந்தேகம்?



கொழும்பு, ஜூலை 30

பொலிஸ்மா அதிபர் பதவி சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் கண்டி பெரஹராவுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் கையொப்பமின்றி பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த முடியாது. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார். இவ்வாறானதொரு நிலையே, பெரஹராவுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலை ஏற்படக் காரணமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்


**மாணிக்கக் கல் அகழ்வு ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிலையம்** யாழ் கிளையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கீழ்வரும் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. சுய தொழில் தொடங்க உள்ளோர் இணைந்து பயன் பெறுங்கள். **பயிற்சி இலவசம்.**

- **ஆடம்பர ஆபரணம் தயாரித்தல் - 04 மாதங்கள்.**
- **நகை தயாரிப்பு (பத்தர் வேலை) - 10 மாதங்கள்.**

தொடர்புகளுக்கு:- 077 640 4383

(CS/55803) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 06.10.1957 மறைவு 28.07.2024

### பரராஜசிங்கம் ஸ்ரீகாந்தன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் ஸ்ரீகாந்தன் நேற்று முன்தினம் (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசேகரம் - ஐராங்கனதேவி தம்பதியரின் மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன், ஸ்ரீநாத், இளமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுலக்சியின் அன்பு மாமனாரும், ரிஷிகேஷின் அன்பு பேரனும், சந்திரா, வசந்தா, செந்தமிழ்பாலன், கருணைபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மருதடியான், டொனால்ட் குமார், கௌரி, சௌதாமினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/1, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர். 070 777 5348

(CS 55808) A-1

## மரண அறிவித்தல்



### பரமநாதன் பரமேஸ்வரி

வீமன்காமம் வெங்காயச் சங்கத்தடியைப் பிறப்பிடமாகவும், தையிட்டி காங்கேசன்துறை கண்ணகி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும், கிளிநொச்சி ஆனைவிழுந்தான் மற்றும் தாவடி தெற்கு பத்தானை வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் பரமேஸ்வரி நேற்று முன்தினம் (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனியர் - வள்ளிஅம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், விநாயகமூர்த்தி (தவம்) அவர்களின் அன்புச் சகோதரியும், அமரர் விநாயகமூர்த்தி மற்றும் கிருஷ்ணகுமார் (கதிரமலை - தையிட்டி கண்ணகி அம்மன் ஆலய அறங்காவலர், செல்வச்சந்நிதி விசாகரத்தின ஐயர் மடத்தின் அன்னதான சபைத் தலைவர், கிளிநொச்சி வன்னேரிக்குளம் ஐயனார் ஆலய நிர்வாக சபை, அன்னதான சபை ஆகியனவற்றின் உப தலைவர், ஆனைவிழுந்தான் சிவன் ஆலயத்தின் ஸ்தாபகர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அப்பலோஷனா (மாயா), ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயசங்கர் மற்றும் திஸ்பியா, உதயலோகிதா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாம்ஷனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது தையிட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வீமன்காமம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்ணகி அம்மன் கோவிலடி, தையிட்டி.

தகவல்: ப.கிருஷ்ணகுமார் (கதிரமலை - மகன்)
077 059 1767, 077 467 1849 (Whatsapp)

## மரண அறிவித்தல்



தோற்றம் 13.03.1949 மறைவு 28.07.2024

### சுப்பிரமணியம் மகேந்திரன் (இந்தி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேந்திரன் நேற்று முன்தினம் (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொற்கொடி தம்பதியரின் பாசமிகு மகனும், சாந்தலிங்கம் தம்பதியரின் மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், மகராச், காயத்திரி, அபிராமி, பெல்சியா ஆகியோரின் தந்தையும், கங்காதரன், குகேந்திரன், காலஞ்சென்ற மாலதி மற்றும் குமாரசாமி, றஞ்சினி, பகீரதன், சாந்தி, தயாளினி, அமிழ்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (01.08.2024) வியாழக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம் ஓழுங்கை பலாலி வீதி, திருநெல்வேலி.

தகவல்: சு.கங்காதரன் (சகோதரன்) 077 714 0449

(CS/55802) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வயிரவி செல்லத்துரை**
(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

மண்ணில்
29.06.1944

விண்ணில்
23.07.2022

ஆண்டு இரண்டு கடந்தாலும்
ஓவியமாகப் பதிந்திருக்கிறது உங்கள் முகம்
பாசத்தைப் பொழிந்து எம்மைப் பண்புடன் தலைநிமிர
வாழ வழிவகுத்த தெய்வம்
மெழுகாய் உடல் உருகி உழைத்து எமக்காக
வாழ்நாள் முழுவதும் ஒளியேற்றிய அப்பாவே!
ஆண்டு இரண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நினைவில் நிழலாய் தொடரும்
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இளவாலை வடக்கு,
இளவாலை.

(CS/1027) J-1

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.



பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் கு.ரவீந்திரா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பங்கேற்றார். (ச-25-19)



மாணவர்களுக்கான உடல், உள ஆரோக்கிய மருத்துவப் பரிசோதனைகள் பொன்னாலை கண்ணபிரான் படிப்பகத்தில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் சங்கானை பதில் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொன்னாலை, மூளாய் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர். (ச-25- 66)



## ஒலிம்பியாட் போட்டியில் கிளி. மாணவன் வெற்றி

கிளிநொச்சி, ஜூலை 30

வடக்கு மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் கிளிநொச்சி, முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவன் பவிசன் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ச-25- 13)

## வருடாந்த பரிசோதனை



சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வு சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார கலந்துகொண்டார். இதன்போது வாகனங்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுதிகள் என்பன பரிசோதிக்கப்பட்டன. (ச-25-66-27-20)



சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும், சைவ மாநாடும் சைவப்புலவர் கமலநாதன் தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.
இதன்போது க.கைலநாதனுக்கு சைவப்புலவர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-25)

வடமாகாண கரப்பந்தாட்டப் போட்டியில் சாதனை படைத்த முல்லைத்தீவு, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25-19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து முன்னெடுக்கும் 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-19)





## தமிழ் மொழித்தினப் போட்டி; கிளி. மத்திய கல்லூரி முதலிடம்


கிளிநொச்சி, ஜூலை 30

வலய மட்ட தமிழ் மொழித் தின கலைத்திறன் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அனைத்துப் போட்டிகளிலும் முதலிடத்தை தனதாக்கியுள்ளது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

கர்நாடக சங்கீதம் இசை தனி, இசை குழு -1, இசை குழு -2, நாட்டார் இசை, பரதநாட்டியம், நாட்டியநாடகம் உள்ளிட்ட அனைத்துப் போட்டிகளிலும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டனர். (ச-13)



காவேரிக் கலாமன்றம் ஏற்பாடு செய்த 'நண்டு தொழில் இலக்கியப் பண்பாட்டு கூடல்' கடந்த சனிக்கிழமை வேலணை-செட்டிப்புலத்தில் நடைபெற்றது. நண்டு தொழில் இலக்கியப் பண்பாட்டுக் கூடலின் தலைவர் ரஜீவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக காவேரிக் கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் ரெபரண்ட் ஈ.எஸ். யோசுவா, சிரேஷ்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கருணாகரன், கிராம அலுவலர் கோகிலரூபன், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மார்க்கண்டுதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-27)



சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் கொடியேற்றத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-9)




சாவகச்சேரி, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய சிறார்களின் மாதிரிச்சந்தை, வித்தியாலய முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் முன்னாள் செயலாளர் ச. தயாபரன் கலந்துகொண்டார். (ப-9)

## சான்றிதழ் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை-மாமூலைப் பகுதியில் அமைந்துள்ள 'வித்தியா தீபம்' என்ற புலம்பெயர் தமிழர்களால் உருவாக்கப்பட்ட கல்வி மற்றும் தற்சார்ப்புப் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், 'நலிவுற்ற எம்மை தற்சார்பே காக்கும்' என்ற தொனிப்பொருளில் உருவாக்கப்பட்ட வித்தியா தீபம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் மூன்றாவது கட்ட மாணவர்களுக்கான ஆறுமாத கால தையல் பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் கண்காட்சியும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

ஏற்பாட்டாளர் லிகிர்த்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் சிவசுவாமி சர்மினி, சிறப்பு விருந்தினராக வித்தியாதீபம் சுவிஸின் ஆலோசகர் ம.ஸ்ரீகரன் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)




50 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் சாவா நண்பர்கள்-1993 அமைப்பினர், 'பிரிவோம் சந்திப்போம்' என்னும் 5 நாள் செயற்றிட்டத்தை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்துள்ளனர். தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் 1993 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண உயர்தர வகுப்புகளில் கற்றவர்கள் ஒன்றிணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (ப-9)





மறைந்த நவசமாசமாஜக் கட்சியின் தலைவரும், மூத்த இடதுசாரி அரசியல்வாதியுமான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவை நினைவுகூர்ந்து அஞ்சலி நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடைப்பிடிக்கப் பட்டது. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக பொதுஜன பெரமுனவின் விசேட அரசியல் குழுக்கூட்டம் மஹிந்த ராஜபக்சவின் கொழும்பிலுள்ள வதிவிடத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன்போது 'ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்காமல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும்' என ஒரு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர். எனினும், 'கட்சியின் சார்பில் மொட்டுச் சின்னத்தின்கீழ் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படவேண்டும்' என நாமல் அணியினர் வலியுறுத்தியுள்ளனர். இதனால் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. இறுதியில் தனியான வேட்பாளரைக் களமிறக்குவதற்கு பெரமுன தீர்மானித்துள்ளது.

கருத்துப் பகிர்வுகளைத் தொடர்ந்து, பெரும்பாலான உறுப்பினர்கள் கட்சியின் சார்பாகத் தனியான வேட்பாளரைக் களமிறக்குவதைத் தொடர்ந்தே அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். எனினும், பெரமுனவின் வேட்பாளர் யார் என்று நேற்றுத் தீர்மானிக்கப்படவில்லை. இலங்கையின் பெரும் செல்வந்தரும் முதலீட்டாளருமான தம்மிக்க பெரேராவை வேட்பாளராகக் களமிறக்குவதற்கே கூடுதலான சாத்தியங்கள் உள்ளன.

இதேவேளை - தம்மிக்க பெரேரா நேற்றைய இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44-6)

## இந்து...

முன்னெடுக்கின்றனர் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் உள்ளதாவது:-

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்த குடியேற்றங்களை இலங்கை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. இது பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்களின் சொத்து மற்றும் மத உரிமை ஆகியவற்றுக்குத் தீங்கு விளைவிப்பதாகவே காணப்படுகின்றது.

26 வருட ஈவிரக்கமற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசாங்கம் 2009 ஆம் ஆண்டில் தோற்கடித்தது முதல், வடக்கு - கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரும், பாதுகாப்புத் தரப்பினரும் செயற்பாட்டாளர் குழுக்களைக் கண்காணிப்பது, உடன்பட மறுத்தலை ஒடுக்குவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மதசுதந்திரத்துக்கான உரிமைகளை அதிகளவில் மீறிவருகின்றனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள இந்துக் கோவில்களில் அதிகாரிகள், பௌத்த மதகுருமாருடன் இணைந்து இந்து மத கடவுள்களின் விக்கிரகங்களைச் சேதப்படுத்தியுள்ளனர் அல்லது அகற்றியுள்ளனர். வழிபாட்டில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்துவது, தாக்குவது, கைது செய்வது போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

சிறுபான்மை இனத்தவர்களின் கலாசார மத அடையாளங்கள் மீதான அதிகரித்த ஒடுக்குமுறைகள் காரணமாக, நல்லிணக்கம் குறித்து இலங்கை அரசாங்கம் உரத்த குரலில் பேசுவது போலியானதாக, வெறுமையானதாகத் தோன்றுகின்றது. ஏனையமக்களைப் பலிகொடுத்து சிங்கள - பௌத்த தேசியவாதத்தை ஊக்குவிக்கும் மலினமான இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு சர்வதேசத்தின் ஒருங்கிணைந்த அழுத்தம் அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## பெரமுன...

பாவதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் ஏற்கனவே அறிவித்திருந்தனர். இவ்வாறிருக்கையில், தனியான வேட்பாளரைக் களமிறக்குவது என்ற பெரமுனவின் முடிவால் கட்சி பிளவடையும் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை - கட்சியின் இந்த முடிவுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு எதிராகவும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகவும், மாற்று அணி வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் மேடையேறும் பெரமுனவின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் அறிவித்துள்ளார். (அ-ம-44)

## ரணிலையே...

தாகவும், கட்சியின் பெரும்பாலானவர்கள் ரணிலின் பக்கமே நிற்கின்றார்கள் என்றும் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பது தொடர்பாக மஹிந்த ராஜபக்சவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது. பெரமுனவின் தீர்மானம் எவ்வாறாக இருந்தாலும், முக்கியமான நேரத்தில் நாட்டைக் காப்பாற்றிய ஜனாதிபதிக்கே எனது ஆதரவு என்றும் பிரமித்த பண்டார தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## 'அரகலய'...

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்ததாவது:-

"நாட்டை நாசமாக்கிய ராஜபக்சக்களை நாட்டு மக்கள் விரட்டியடித்தனர். ஆனால், அவர்களின் காவலனாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாறியுள்ளார். பிரதான எதிர்க்கட்சியும் அவர்கள் வழியில்தான் பயணிக்கின்றது. எனவே, இவர்களெல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். சாதாரண மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவே எமது அணி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றது" - என்றார்.

நுவான் போபகே ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துவரும் சட்டத்தரணியாவார். தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும் சட்டப்போரில் ஈடுபட்டுவந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44-6)

## போலி...

ஆனைக்கோட்டையில் வசிக்கும் ஒருவருக்கு அற்றோனித்தத்துவம் வழங்கியிருந்தனர். அந்த அற்றோனித்தத்துவ அதிகாரத்தைப் பயன்படுத்திய அந்த நபர், தொடர்புடைய காணிக்கு அருகிலிருந்த காணிகளையும் அடாத்தாக ஆக்கிரமித்து பருத்தித்துறையைச் சேர்ந்த நில அளவையாளர் ஒருவர் மூலம் வரைபடம் கீறியுள்ளார். இதைத் தொடர்ந்து பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர் மூலம் பிறிதொருவருக்கு அந்தக் காணியின் அதிகாரம் கைமாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போலியாக உறுதி நிறைவேற்றப்பட்ட காணியின் உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட விசேடகுற்றவிசாரணைப்பிரிவினரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை நடத்திய பொலிஸார், அற்றோனித்தத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்தியவர், காணியை அளவீடு செய்த நிலஅளவையாளர் மற்றும் காணியின் அதிகாரம் இறுதியாக மாற்றப்பட்டவர் ஆகிய மூவரையும் கைதுசெய்தனர். அவர்கள் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டபோது, மூவரையும் கடுமையாக எச்சரித்த நீதிவான் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்கைத் தவணையிட்டார். (அ-ம-26)

## இனப்...

யத்தின் செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். ஆனால் அபிவிருத்தி விடயங்களில் தாங்கள் ஒதுக்கப்படுவதாக வடக்கு - கிழக்கிலிருந்து முறைப்பாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னரே இதைச் சொல்கின்றோம்.

நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு தென்னாபிரிக்க தூதரகம், சுவிஸ் தூதரகம் போன்றவற்றுடன் இணைந்து ஒரு முக்கூட்டு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

தென்னாபிரிக்கா உண்மை, நல்லிணக்கம் என்பவற்றின் ஊடாக இனக்குரோதங்களை வெற்றிகரமாகக் களைந்த ஒருநாடு. தென்னாபிரிக்க பொறிமுறையை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

சுவிற்ஸர்லாந்து அங்குள்ள தமிழ்ச் சமூகத்துடன் நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. அத்துடன் ஜப்பானுடனும் சிவில் சமூகங்களுடனும் நெருக்கமான உறவைப்பேணி வருகிறது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியமான பங்களிப்பையும் சுவிற்ஸர்லாந்தால் நடைமுறைப்படுத்த முடியும். ஜப்பானிய முதலீட்டாளர்கள் நீங்கள் அழைத்தால் வரமாட்டார்கள். அவர்கள் முதலீடு செய்வதற்குரிய களச்சூழல் உருவாக்கப்படவேண்டும் - என்றார். (அ-ஒ-6)

## குழந்தை...

நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். மரியராஜ் சிந்துஜா (வயது-27) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு ஆண் குழந்தை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி பிறந்துள்ளது. 11ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து தாயும் சேயும் நலமாக வெளியேறியுள்ளார்கள். 7 நாட்களின் பின்னர் முருங்கன் மருத்துவமனையில் தையல் வெட்டுமாறு கூறியதையடுத்து கடந்த 16ஆம் திகதி முருங்கன் மருத்துவமனையில் தையல் வெட்டப்பட்டது. இதன் பின்னர் கடந்த 27ஆம் திகதி மகளுக்கு குருதிப்பெருக்கு ஏற்பட்டதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

'அன்று இரவு அம்புலன்ஸ் வண்டி மூலம் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். பதிவுகளின் பின்னர் விடுதியில் சேர்க்கப்பட்டார். குருதிப்பெருக்கு கட்டுப்படவில்லை. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அவர் சுயநினைவை இழந்தார். அதன் பின்னர் அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட போதும் மு.ப. 11 மணியளவில் அவர் உயிரிழந்ததாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. குருதிப்பெருக்குக் காரணமாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற அன்று இரவு மருத்துவர்கள் பார்வையிட்டிருந்தால் எனது மகளைக் காப்பாற்றியிருக்கலாம்' என உயிரிழந்த பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம் ஹனீபாவிடம் கேட்டபோது, உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக பரிசோதனைகளுக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. பரிசோதனை அறிக்கை வெளிவந்தால் உயிரிழப்புக்கான காரணத்தை முழுமையாக அறிந்துகொள்ளமுடியும். எப்படி இருந்தாலும் மருத்துவமனை தரப்பினர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

உயிரிழந்த சிந்துஜா, சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தபோதும் பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் நடைபெறவில்லை. பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் ஒரு சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் இந்தச்சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ-ஒ-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 | | 27 |
| 01 | | 07 |
| 1967 | | 2024 |



## சீமோன் ததேயு மரிய சாந்தினி

கட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சீமோன் ததேயு மரிய சாந்தினி கடந்த (27.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ் (பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்) மற்றும் அல்போன்ஸ் மரியநாயகி (ஓய்வு பெற்ற அதிபர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்) தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை மற்றும் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சீமோன்ததேயு (சூசைதாஸ்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்பிறிங்கிள் (கொலண்ட்), மைக்ஸ்மிலன் (மது), ஸ்ரெபானி ஆகியோரின் அன்புத் தாயாரும், டினுசியா, பவுஸ்ரீனா ஆகியோரின் மாமியாரும், ரவிச்சந்திரன் (கொலண்ட்), குலேந்திரன், மரிய ஜெயந்தினி (கொலண்ட்), மரிய ஜெயந்திரன் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றொசிற்றா (கொலண்ட்), வசந்தி (பெல்ஜியம்), காலஞ்சென்ற ஜெனி மற்றும் சசி (கொலண்ட்), அன்ரனி, மரியதாஸ், அற்றன்ஸ் ஆகியோரின் மைத்துனியும், மேளின் (கொலண்ட்), றெறன்சியா (கொலண்ட்), சாருஜா (கொலண்ட்) ஆகியோரின் பெரியம்மாவும், றொபியா (கொலண்ட்), ரைசன் (லண்டன்), எம்பியூறி (பெல்ஜியம்), ராதா (கொலண்ட்), மிரியம் (கொலண்ட்), சௌமி (கொலண்ட்), ஜெய்சா (கொலண்ட்) ஆகியோரின் பெரியத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை இல 24 சின்னக்கடை வீதி, குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு காலை 7.00 மணியளவில் அவரது இல்லதிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு 5ஆம் வட்டாரம் மண்டைதீவில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மண்டைதீவு புனித பேதிருவானவர் ஆலயத்தில் 12 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளுயுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR/43006) J-1

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 13 | | 28 |
| 03 | | 07 |
| 1957 | | 2024 |



## முருகையா சிவநேசன்

(சவிதாஸ் - மலரவன் புடவையகம்,
முகாமையாளர் - கிளிநொச்சி கந்தசிவாமி கோவில்)

யாழ்ப்பாணம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட முருகையா சிவநேசன் நேற்று முன்தினம் (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - இரத்தினம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அகிலாண்டநாயகி அவர்களின் அன்புக் கணவரும், அனோஜா, அனோஜன், மலரவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆரூரனின் அன்பு மாமனாரும், செழியனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் சுகுணாதேவி, குகநேசன் (நோர்வே), காலஞ்சென்ற கௌசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அம்பிகாதேவி, திருஞானசெல்வம், சிவஞானசோதி (சுவிஸ்), திரிபுரநாதன் (சுவிஸ்), அமிர்தகலைவாணி, அரியமலர் (லண்டன்), கதிர்காமலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற திருச்செந்தூர்நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

காரைக்கால் சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 593 6422, 077 332 5591

(CS/55806) J-1

# பரிஸ் ஒலிம்பிக் தொடர்:
# அகதிகள் விரட்டியடிப்பு!

பரிஸ், ஜூலை 30
பிரான்ஸின் தலைநகர் பரிஸில் ஒலிம்பிக் தொடர் இடம்பெற்றுவரும் நிலையில், இந்தத் தொடர் காரணமாக பல்லாயிரம் அகதிகள் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர் என்று பிரெஞ்சு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பரிஸில் வீடற்றவர்களும், அகதிகளும் செய்ன் நதிக்கரையோரமாகவும் பரிஸின் தெருக்களிலும் தங்கியிருந்தனர். ஒலிம்பிக் தொடர் காரணமாக, அகதிகளும் வீடற்றவர்களும் கட்டாயத்தின் அடிப்படையில் அந்தப் பகுதிகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பிரான்ஸ் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஒலிம்பிக் தொடர் காரணமாக, தங்கள் வசிப்பிடங்களான தெருமுனைகளை பலநூறு அகதிகள் இழந்துள்ளனர். ஒலிம்பிக் தொடர் முடியும் வரையில் அவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அந்தச் சலுகை அநேகமானவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று பிரான்ஸ் ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. பயங்கரவாதிகளின் இலக்குகளில் பிரதானமானதாக ஒலிம்பிக் தொடர் தற்போது காணப்படுகின்றது. இதனால், ஒலிம்பிக் தொடருக்கு பிரான்ஸ் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


### வேலைவாய்ப்பு

நல்லூரில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்தி கடை ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை. (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு: 070 402 3953

### வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

(CS/55801) J-1

### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. சமையலாளர், சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர். தகுந்த சம்பளம் வழங்கப்படும். (உணவு, தங்குமிட வசதி இலவசமாக தரப்படும்.)

தொடர்புகளுக்கு:
070 193 0545 or 076 193 0545

### சமையல் உதவியாளர் தேவை

கொடிகாமத்தில் இயங்கிவரும் சிற்றுண்டி கடை ஒன்றிற்கு பகுதிநேர பெண் சமையல் உதவியாளர் தேவை. மாதம் 4 நாட்கள் விடுமுறையுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு அழையுங்கள்:
076 417 1063


## பிரான்ஸில் தாக்குதல்

பிரான்ஸில் 30 பேர் கொண்ட குழு, திருமண நிகழ்வுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதில் 20க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். தாக்குதல்தாரிகளில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம)

## ஒலிம்பிக்கில் ஊக்கமருந்து

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் இடம்பெற்றுவரும் ஒலிம்பிக் தொடரில், இருவகையான ஊக்கமருந்துகளைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் ஈராக்கைச் சேர்ந்த ஜூடோ வீரர் சஜத் செஹெனுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)


### வேலை வாய்ப்பு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அச்சகம் ஒன்றிற்கு பின்வரும் பணிகள் வெற்றிடமாகவுள்ளன. தகுதியானவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பக்க வடிவமைப்பாளர் (கணினி அறிவு)
2. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

சுயவிபரக் கோவையை sujeevans513@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக தொடர்புகளுக்கு

075 979 9161, 074 072 9161

(CS/55807) J-1


## வடகொரியாவில் அவசரநிலை

வடகொரியாவில் கடந்த சில தினங்களாகப் பெய்த கனமழை காரணமாக, அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளப் பேரிடரை அதிபர் கிம் ஜோங் உன் பார்வையிட்டுள்ளார். (ம)


### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் வியாபார நிலையத்திற்கு தச்சுத் தொழில் தெரிந்தவர்கள், வாகன சாரதிகள், (கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள்) மற்றும்
ஆண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து தரப்படும்

தொடர்பு :- 076 915 8453

(CS/55342) J-1

### வாடகைக்கு

- K.K.S வீதி சிவன் கோயிலுக்கு அருகாமையில் கடைகள். Store நடத்துவதற்கான காணிகள் வாடகைக்கு உண்டு.
- சிவன் பண்ணை வீதியில் அறைகள் வாடகைக்கு உண்டு.

076 664 1517

(CS/55805) J-1

### சமையலாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் Guest House ஒன்றிற்கு தங்கியிருந்து சமைப்பதற்கு சமையலாளர் தேவை. உணவு தங்குமிட வசதியும் உண்டு.

076 664 1517

(CS/55804) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.